

கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாநில அளவிலான கால்பந்து போட்டிகள் திண்டிவனத்தில் நடைபெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் பரிசு மற்றும் கோப்பையை வழங்கினார் .உடன் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேது நாதன், நகர செயலாளர் கண்ணன், நகர்மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி நல்லூர் தெற்கு ஒன்றியம் பாசி குளம் கிராமத்தில் இருந்து பெலாந்துறை கணபதி குறிச்சி கிளிமங்கலம் குருக்கத்தாஞ் சேரி பெண்ணாடம், விருத்தாசலம் வழியாக சென்னைக்கு புதிய அரசு பேருந்து வழித்தடத்தை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தொடங்கி வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ப.கோவிந்தராசன் வரவேற்புரை!

# கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் சிறப்புரை!

நாகை, செப். 4-

நாகை மாவட்டம் கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்வேளூர் சண்முகா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றியக் கழக அவைத் தலைவர் தங்க.மனோகரன் தலைமை தாங்கினார். கீழ்வேளூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப. கோவிந்தராசன் வரவேற்புரையாற்றினார்.

மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் சிறப்புரையாற்றினார்.

கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.பழனியப்பன், ஒன்றியக் கழக துணைச் செயலாளர்கள் அ.வேதநாயகம், ரவிக்குமார், வெண்ணிலாபாபு,

பொருளாளர் பாரதி மோகன், மாவட்ட பிரதிநிதிகள் சி.வீரமணி, ஆர்.நடராஜன், ஷேக்முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாவட்ட கலை இலக்கிய பேரவை துணை அமைப்பாளர் அங்காடிசேகர், மாவட்ட சுற்றுச் சூழல் அணி தலைவர் ஏ . எ ஸ் . எ ன் . ர ா ஜ ா , மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் வி.சாய்பாஷா, மாவட்ட மகளிர் அணி வலைதள பொறுப்பாளர் ஹேமலதா சரத்பாபு, மற்றும் ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், உறுப்பினர்கள், ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் 2024 நாடாளுமன்ற தேர்தல் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி 40க்கு 40 வெற்றி கனிபறித்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் தளபதி அவர்களுக்கு வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்வது என்றும், நாகை நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட இந்தியா கூட்டணியின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் வை.செல்வராஜ் வெற்றிக்கு உழைத்திட்ட கீழ்வேளூர் வடக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழகத்தினர் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வது என்றும், சட்டமன்ற தேர்தலில் 13 முறை நின்று வென்று 5 முறை தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பு ஏற்று தமிழக மக்களுக்கு பல்வேறு நல திட்டங்களை கொண்டு வந்து தமிழக மக்களின் வாழ்வை உயர செய்த முத்தமிழ் அறிஞர் அவர்களுக்கு கலைஞர் உருவம் பொறித்த, தமிழ் வெல்லும் என்ற வரிகளோடு நாணயம் வெளியிட்ட ஒன்றிய அரசிற்கும், கோரி பெற்ற கழகத்தலைவர் -தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வது என்றும், கழகத்தலைவர்- தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சியில் மகளிருக்கு ரூ. 1,000, மகளிருக்கு பேருந்தில் இலவச விடியல் பயணம், புதுமை பெண் திட்டம்,

நான் முதல்வன் திட்டம், தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி திட்டம், மக்களுகளுடன் முதல்வன் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை தமிழ்நாட்டிற்கு தந்து சிறப்பாக ஆட்சி செய்யும் தளபதி அவர்களின் ஆட்சி 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் 200 இடங்களுக்கு மேல் என்ற இலக்கை எட்டிடும் வகையில் கீழ்வேளூர் சட்ட மன்ற தொகுதியில் பெருவாரியான வாக்குகளை பெற்றிட கீழ்வேளூர் வடக்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும், கழக அரசின் திட்டங்களை, சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்து கூறி கழகத்திற்கு வாக்குகளாக மாற்றிட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### என்.கௌதமன் தலைமை!

# நாகை மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி சார்பில் கலைஞர் பிறந்த நாள் மருத்து முகாம்!

## என்.எழிலன் எம்.எல்.ஏ., - அஞ்சுகம்பூபதி தொடங்கி வைத்தனர் !

நாகை. செப். 4-

நாகை மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மருத்துவ முகாம் நாகை லலிதாம்பிகை திருமண மண்டபத்தில் நடைபெற்றது. முகாமிற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என். கௌதமன் தலைமை தாங்கினார். நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, நாகை மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர்கள் வி. விக்னேஷ், ஜி.பிரிண்யா, பி.மணிகண்டன், நா.சதீஸ் பாபு, சி.ரவிச்சந்திரன், க.அறிவழகன் ஆகியோர் முன்னிலை வகித்தார். மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் சி.முகுந்தன் வரவேற்றார். மருத்து முகாமை மாநில மருத்துவர் அணிச் செயலாளரும், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினரு மான என்.எழிலன், மாநில மருத்துவர் அணி துணை செயலாளரும், தஞ்சை மாநகராட்சி துணை மேயர் அஞ்சுகம்பூபதி ஆகியோர் தொடங்கி வைத்து பேசினார்கள். முகாமில் மருத்துவர்கள் எம்.அமுதன், பி.ஸ்ரீதர், எஸ்.பாண்டியராஜன், டி. ரெங்கராஜ், பூர்ணிமா, பி.சரத்பாபு, எம்.மணிகண்டன், காவியாரஜேஷ், பி. கமலி, சோபியா கொண்ட மருத்துவ குழுவினர் மருத்துவ சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்கள். முகாமில் இரத்த பரிசோதனை, எக்கோ பரிசோதனை, இ.சி.ஜி., இரத்த அழுத்தம், கண் பரிசோதனைகள் செய்யப்பட்டது. மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டது.

மருத்துவ முகாமில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.ராஜேந்திரன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர் ஆரூர் மணிவண்ணன், நாகூர் நகரக் கழக செயலாளர் எம். ஆ ர் . செ ந் தி ல் கு மா ர் , மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, ஆர்.ஆர். குலோத்துங்கன், எஸ்.பால்ராஜ், பி.முருகானந்தம், த.தமயேந்தி, மு. தினேஷ் குமார், வ.கமல், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.எம்.ஏ.கணேசன், பிரதிப், கலையரசன், சாதிக்ஜபபார், நகரக் கழக நிர்வாகிகள் பி.திலகர், வெற்றிலைகடைசிவா, சித்ரா, அபுபக்கர், ரமணி, நகர இளைஞர்அணி அமைப்பாளர் ஆர்.எஸ்.சத்தியன், நகர்மன்ற உறுப்பினர்கள் சத்தியவாணிகணேசன், சுரேஷ், சுந்தரஸ்வரிகணேசன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் எஸ்.பால்ராஜ் நன்றி கூறினார்.



சேலம் கிழக்கு மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் தெற்கு ஒன்றியம் சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. இதில் தெற்கு ஒன்றிய செயலாளர் அன்பு (எ) தங்க மருதமுத்து வரவேற்புரையாற்றினார். கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் முரா. கருணாநிதி, மாவட்ட பொருளாளர் ஆர். வி. ஸ்ரீராம், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ. ஆறுமுகம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ. சீனிவாசன், பொதுக்குழு உறுப்பினர் சந்திரமோகன், மனோகரன், முத்துலிங்கம், சோமசுந்தரம், மத்திய ஒன்றிய செயலாளர் மூர்த்தி, பேரூர் செயலாளர்கள் வெங்கடேஷ், பாபு மற்றும் ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சேலம் மாநகரில் உள்ள பாரதி வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் 11 ம் வகுப்பு படிக்கும் 232 மாணவர்களுக்கு மாவட்டக் கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். உடன் 12வது கேட்ட மாமன்ற உறுப்பினர். சங்கீதா நீதிவர்மன் உள்ளார்.

### கும்பகோணம் மகாமக

# திருவிழாவை தேசிய திருவிழாவாக அறிவிக்கவேண்டும்!

## மகாமக முன்னேற்பாடு கூட்டத்தில் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. கோரிக்கை!

தஞ்சாவூர், செப்.4-

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் 2028 ஆம் ஆண்டு நடைபெற உள்ள மகாமகம் பெருவிழாவினை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில், மாநிலங்களவை உறுப்பினர் சு. கல்யாணசுந்தரம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி. ஆர்.சுதா, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் ஆகியோர் முன்னிலையில் 31.08.2024 அனைத்துத் துறை அலுவலர்களுடன் நடைபெற்றது.

இ ந் நி க ழ் ச் சி யி ல் ஆட்சியர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், தெரிவித்ததாவது.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், கும்பகோணம் நகரில் 2028 ஆம் ஆண்டு நடைபெற உள்ள மகாமகம் திரு விழாவினை முன்னிட்டு, சைவ மற்றும் வைணவ திருக்கோயில்களில் தேரோட்டங்கள், ஓலைச்சப்பரம், சுவாமி வீதியுலா, தெப்பம் மற்றும் மகாமக குளம், காவிரி ஆற்றில் தீர்த்தவாரி நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, திருவிழா சிறப்புற நடைபெற அனைத்து துறை அலுவலர்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வருவாய் துறை, காவல் துறை, இந்து சமய அறநிலைத் துறை, நகராட்சி, நெடுஞ்சாலைத் துறை, பொதுபணித் துறை, ஊரக வளர்ச்சி துறை மற்றும் மின்சாரத் துறை உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டு துறையினர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் மற்றும் முன்னேற்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டு விழா சிறப்புடன் நடைபெற அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து முழுமையான ஒத்துழைப்பினை நல்கிட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து பேசிய தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் பேசுகையில் :


தென்னிந்தியாவின் கும்பமேளா என்றழைக்கப்படும் கும்கோணம் மகாமக திருவிழாவிற்கு இந்தியா மட்டுமில்லாது வெளிநாடுகளிலிருந்தும் பக்தர்கள் வருகின்றனர். இதனால் இத்திருவிழாவை ஒன்றிய அரசு தேசிய திருவிழாவாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது குறித்து நாடாளுமன்ற கூட்டத்தொடரில் பேசியுள்ளேன்.

மேலும் மகாமக திருவிழாவிற்குத் தேவையான முன்னேற்பாடு பணிகளான 2028ம் ஆண்டு நடைபெறவிருக்கும் மகாமக திருவிழாவிற்கு புனித நீராட லட்சக் கணக்கான மக்கள் இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும் கும்பகோணம் மாநகராட்சி பகுதிக்கு வருகை தருவதால் கும்பகோணம் ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள திருநாகேஸ்வரம் மற்றும் தாராசுரம் ரயில் நிலையங்களை மேம்படுத்தி நான்கு வழி ரயில் தடம் மற்றும் ரயில் நிலையத்திற்கு வந்து செல்ல சாலை வசதி மற்றும் பேருந்து, நான்கு சக்கர வாகனம், இரு சக்கர வாகனங்கள் தடையின்றி வந்து செல்வதற்கும், நிறுவத்து வதற்கும் தேவையான வாகனம் நிறுத்துமிடம் போன்ற அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும். இதனால் மகாமக திருவிழா காலத்தில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலை பெருமளவில் தவிர்க்க முடியும்.

கோயில் நகரமான கும்பகோணம் மற்றும் சுற்றியுள்ள நவக்கிரஹ தலங்களுக்கு பல பகுதிகளிலிருந்து பக்தர்கள் தொடர்ந்து வருகைபுரிகிறார்கள். இவர்கள் தனியார் விடுதிகளில் அதிக கட்டணம் செலுத்தி தங்கிவருகிறார்கள். மேலும், விடுதிகளில் அசைவ உணவு வழங்கப்படுவதால் பக்தர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகிறார்கள். எனவே, கும்பகோணம் ரயில் நிலையம், தாராசுரம் ரயில் நிலையம், திருநாகேஸ்வரம் ரயில் நிலையம் மற்றும் பாபநாசம் ரயில் நிலையத்தில் பக்தர்கள் வசதிக்காக புதிய யாத்ரி நிவாஸ் கட்டடம் மற்றும் உணவு விடுதி கட்டப்பட வேண்டும். மேலும் கும்பகோணம் மாநகராட்சி பகுதிகளில் அரசலாற்றில் ஆர்.சி.சி பாலங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உள்ளிட்ட பல்வேறு முன்னேற்பாடு பணிகள் குறித்து பேசினார்.

இக்கூட்டத்தில், கும்பகோணம் மாநகராட்சி மேயர்.க.சரவணன், துணை மேயர் சுப.தமிழழகன், உதவி ஆட்சியர் (பயிற்சி) உத்கர்ஷ் குமார்,இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர் மு.பாலகணேஷ், வருவாய் கோட்டாட்சியர் செ.பூர்ணிமா, மாநகராட்சி ஆணையர் ஆர்.இலட்சுமணன், துணைக் காவல் கண்காணிப்பாளர் (கும்பகோணம்) கீர்த்திவாசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# முதல்வரின் அமெரிக்கப் பயணம் முத்திரை பதிக்கட்டும்...!



முன்னேற்றப் பாதையில் தமிழ்நாடு நடைபோட
முழு வீச்சாய் களத்திலே இறங்கிவிட்டார் நம் முதல்வர்
அன்றாடம் கண்விழித்த நேரம் தொட்டு
அதற்காகவே சிந்தித்து ஓடிஓடி உழைக்கிறார்...!

ஏற்கனவே பல நாடுகளில் முதலீடுகளை ஈர்த்திருந்தாலும்
எப்போது அமெரிக்கா? எனும் எதிர்பார்ப்பு இருந்தது...!
ஆற்றல் மிகு அமெரிக்காவும் சிவப்புக்கம்பளம் விரித்தது ...
அங்குள்ள தமிழர்களின் ஆவல்களும் தீர்ந்தது...

திட்டமிட்டு எதையும் தீர்மானிக்கும் நம் முதல்வர்
திடமான நம்பிக்கையோடு அமெரிக்கா புறப்பட்டார்...
சட்ட ஞானம் நிறைந்திட்ட சகவல்லுநர்கள் துணையோடு
சந்தித்து... சிந்தித்து பேச்சுவார்த்தை தொடங்கினார்...!

அமெரிக்க மண்ணிலே கால் பதித்த அடுத்த கணமே
அடித்தாரே நம்முதல்வர்... அருமையான "சிக்சர்..."
மைக்ரோசாப்ட் கூகுள் ஆப்பிள் என்னும்
மகத்தான நிறுவனங்களுடன் ஒப்பந்தம் போட்டார்...

முதற்படி வைத்ததிலேயே முத்திரை பதித்திட்டார்...
மூலக்கூறு விதைகளை ஆங்காங்கே விதைத்திட்டார்...
இதனால் பல தொழில்களும் வேலைவாய்ப்பும் நிச்சயம்

இது தானே நம் முதல்வரின் எதிர்கால இலட்சியம்!
இன்னுமுள்ள இரு வாரப் பயணமும் இப்படியே செல்லட்டும்
இதயதோட்ட இன்மலர்கள் பூமாலை ஆகட்டும்...
சொன்னதை மட்டுமின்றி சொல்லாததையும் செய்கின்ற
சொக்கத் தங்க முதல்வரின் முயற்சிகள் வெல்லட்டும்

- கவிஞர் **இரவி பாரதி**





வீட்டு வசதி, நகர்ப்புற மேம்பாட்டு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் அமைச்சர் செந்தில் பாலாஜி ஆகியோரின் ஆலோசனைப்படி கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் சீரிய முயற்சியால் கணியூர் ஊராட்சியில் நிறுவப்பெற்ற முதலமைச்சர் எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் பொற் கரங்களால் திறந்து வைக்கப்பட்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கழக சட்டதிட்ட திருத்தக்குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது. யுவராஜ், மணிமாறன் தென்றல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இந்நிகழ்வில் பூவை செல்வராஜ், ஜெ.ஜெயலலிதா, தனம் தங்கதுரை, கோவை ஜெயக்குமார், கவிதா, இந்திரா, மணிமாலா தென்றல், லதா செல்வராஜ், வட்ட செல்வராஜ், சரவணக் குமார், விக்னேஷ் பிரபு, கௌதம், தினேஷ் குமார், ஹரி பிரகாஷ், பிரவீன் குமார், சபரி துரை, தாஸ் பிரபு, சுதீஸ் ராஜ், கோகுல் ராஜ் குமார், சதீஷ் குமார், முத்துகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.